මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම්ගේ කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல : 2026/06

2026.11.13

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு 2026.11.06 அன்று நடத்திய கலந்துரையாடல்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும். எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டு முதல் விரோதப் பிரிவினர்களுக்கிடையில் ஏற்பட்ட கட்சியின் செயலாளர் பதவி தொடர்பான பிரச்சினை காரணமாக, செயலாளர் பதவி தொடர்பில் சர்ச்சைக்குரிய கட்சியாக அக்கட்சி பெயரிடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இப்பிரச்சினையுடன் தொடர்புடைய இரு தரப்பினரும் 2026.11.06 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் போது, இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில், கட்சியின் செயலாளர் பதவி தொடர்பான பிரச்சினை குறித்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் தற்போது விசாரணையில் உள்ள வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதே பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்ல எனத் தெரிவிக்கும் தவறான பிரசாரம் ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்பட்டு வருகின்றமையினால், அதனைத் தெளிவுபடுத்தும் நோக்கில் இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது என்பதையும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க
தவிசாளர்,
தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக